# சங்க கால மக்களும் மனித நேயமும் – ஓர் பார்வை

**முனைவர் ச.சங்கரி**

**எம்.ஏ.,எம்.ஃபில்.,பி.எச்டி.,**

**தத்துவம், சமயம் மற்றும் பண்பாட்டுத்துறை,**

**பூம்புகார்க் கல்லூரி (தன்னாட்சி), மேலையூர் - 609107.**

drsankarijanchirani@gmail.com

27

**ஆய்வுச்சுருக்கம்**

அன்பு, அருள், இரக்கம், விருந்தோம்பல், கொடை போன்றவைகள் தமிழர் பண்பாட்டின் சிறப்பம்சங்களாகும். கொடைத் தன்மையில் தமிழர்கள் உயர்ந்து நிற்கின்றனர். மன்னர்களுக்கு புகழ் சேர்ப்பதில் கொடைத்திறமும் ஒன்றாகும். கொடையில் சிறந்த குறுநில, மன்னர்கள் பெருநில வேந்தர்களைவிட உயர்வாகக் கருதப்பட்டனர். தன்னைப் புகழ்ந்து பாடும் புலவர்களுக்குப் பல ஊர்களை வழங்கியதும் கூத்தர்களுக்கும் இரவலர்க்கும், இல்லை என்று வருவோருக்கும் மன்னர்களும் மக்களும் இன்முகத்தோடு வாரி வழங்கி மனித நேயத்தில் சிறந்து விளங்கினர். வட வேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம் என்று இருந்தாலும் நில அமைப்புக்கு ஏற்றவாறு மலைப்பகுதி குறிஞ்சி நிலம் என்றும், காட்டுப்பகுதி முல்லை நிலமென்றும் பல பிரிவுகளாக, விளங்கியது. பண்டைய தமிழகம். இந்நிலத்தில் வாழ்ந்த தமிழர்கள் இயற்கையை எதிர்க்காமல் நிலத்தின் தன்மைக்கு ஏற்றவாறு வாழ்ந்தனர். நிலத்தின் தன்மைக்கு ஏற்றவாறு உணவு, உடை, கலாச்சாரத்தை அமைத்துக் கொண்டனர். இவர்கள் மனித நேயத்தில் ஒருவரை ஒருவர் விஞ்சும் வகையில் செயல்பட்டதை சங்க இலக்கியங்கள் நமக்கு உணர்த்துகின்றன. சங்ககால மக்களின் மனித நேயப் பண்புகள் தமிழர் பண்பாட்டிலிருந்து பிரிக்க இயலாத ஒன்றாக அமைந்து, இன்றளவும் நினைவு கூறத்தக்க வகையில் அமைந்துள்ளது என்றால் மிகையாகாது.

**திறவுச்சொற்கள்**

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், மனிதநேயம்.

## 1. முன்னுரை

உலகில் தோன்றிய எத்தனையோ பண்பாடு அழிந்துவிட்ட நிலையிலும் தமிழர் பண்பாடு என்றும் போற்றப்பட்டு வருகிறது. அன்பு, அருள், இரக்கம், விருந்தோம்பல், கொடை போன்றவைகள் தமிழர் பண்பாட்டின் சிறப்பம்சங்களாகும். கொடைத் தன்மையில் தமிழர்கள் உயர்ந்து நிற்கின்றனர். மன்னர்களுக்குப் புகழ் சேர்ப்பதில் கொடைத்திறமும் ஒன்றாகும். கொடையில் சிறந்த குறுநில மன்னர்கள் பெருநில வேந்தர்களைவிட உயர்வாகக் கருதப்பட்டனர். தன்னைப் புகழ்ந்து பாடும் புலவர்களுக்குப் பல ஊர்களை வழங்கியதும் கூத்தர்களுக்கும் இரவலர்க்கும், இல்லை என்று வருவோருக்கும் மன்னர்களும், மக்களும் இன்முகத்தோடு வாரிவழங்கி மனித நேயத்தில் சிறந்து

விளங்கினர். எனவே இக்கட்டுரையானது சங்க கால மக்களும் மனித நேயமும் என்பதை விளக்குவதாக அமைந்துள்ளது.

**2. நால் வகை நிலங்கள்**

வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம் என்று இருந்தாலும் நில அமைப்புக்கு ஏற்றவாறு மலைப்பகுதி குறிஞ்சி நிலம் என்றும் காட்டுப்பகுதி முல்லை நிலமென்றும் வயல்பகுதி மருதநிலமென்றும், கடல்பகுதி நெய்தல் நிலமென்றும் பல பிரிவுகளாக, விளங்கியது. பண்டைய தமிழகம். இந்நிலத்தில் வாழ்ந்த தமிழர்கள் இயற்கையை எதிர்க்காமல் நிலத்தின் தன்மைக்கு ஏற்றவாறு வாழ்ந்தனர். நிலத்தின் தன்மைக்கு ஏற்றவாறு உணவு, உடை, கலாச்சாரத்தை அமைத்துக் கொண்டனர். இவர்கள் மனித நேயத்தில் ஒருவரை ஒருவர் விஞ்சும் வகையில் செயல்பட்டதை சங்க இலக்கியங்கள் நமக்கு உணர்த்துகின்றன.

**2.1. குறிஞ்சி நில மக்கள்**

மலையும் மலைசார்ந்த பகுதியும் குறிஞ்சி நிலமாகும். இவர்களது வாழ்க்கை முழுக்க முழுக்க மலை வளத்தை நம்பியே அமைந்திருக்கும். மலைச் சாரல்களில் சிறு குடிசைகள் அமைத்து வாழ்ந்தனர். இவர்கள் தங்கள் பகுதிக்கு வருகின்றவர்களின் வருத்தம் நீங்க நன் மொழிகளைக் கூறி அன்புடன் உபசரித்து, தங்கள் வீட்டில் உள்ள வேகவைத்த மாமிசப் பொரியலுடன் தினையரிசி சோற்றையும் தருவார்கள் மேலும் தங்கள் வீடுகளை அவர்கள் வீடு போல தங்குவதற்கும் அனுமதிப்பர்.

இதனை,

“நும்இல் போல நில்லாது புக்கு

கிழவிர் போ கேளாது கெழீஇ

சேட்புலம்பு அகல இனிய கூறி

பரூஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேலையொரு

குரூஉக்கன் இருடிப் பொம்மல் பெறுகுவீர்” -மலைபடுகடாம் (162-169)

என்பதன் வழி அறியலாம். மேலும் இக்காண வழியில் சொல்வோரை அழைத்து உபசரிப்பதோடு முறை வைத்து அன்போடு பழகும் பண்புடையவர்களாகவும் விளங்கினர்.

**2.2. முல்லை நில மக்கள்**

காடும் காடு சார்ந்த பகுதியும் முல்லை நிலமாகும். இந்நில மக்கள் இடையர் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் தங்கள் பகுதிக்கு வருபவர்களுக்கு, பசுவின் பாலும், பாற்சோறும் வழங்குவதோடு, படுத்துறங்க ஆட்டுத் தோல் படுக்கையும் தந்து குளிரைப் போக்க தீயையும் மூட்டி உதவுவர் என்பதை,

“பல்லாட்டு இணைநிலை எல்லினிர் புகினே

பாலும் மிதவையும் பண்ணாது பெறுகுவிர்

துய்ம்மயிர் அடக்கிய சேக்கை அன்ன

மெய் உரித்து இயற்றிய மிதி அதள் பள்ளி

தீத்துணை ஆகச் சேந்தனிர் கழிமின்"

மலைபடுகடாம் (416-417)

**2.3. மருதநில மக்கள்**

வயலும் வயல் சார்ந்த பகுதியும் மருத நிலமாகும். உழவுத்தொழில் இந்திய மக்களின் முக்கியத் தொழிலாகும். இந்நிலத்தில் பெரும்பாலும் உழவுத் தொழில் செய்வோர் வாழ்வர். இந்நில மகளிர் தங்கள் குழந்தைகளை அனுப்பி விருந்தினர்களை வீடுகளுக்கு அழைத்து வந்து வெண்நெல்லரிசிச் சோற்றை நண்டின் குழம்புடன் கொடுத்து உபசரிப்பர். இதனை

"இருங்காழ் உலக்கை இரும்புமுகம் தேய்த்த

அவைப்புமான் அரிசி அமலை வெண்சோறு

கவைத்தார் அலவன் கலவையோடு பெறுகுவீர்"

சிறுபாணாற்றுப்படை (193-95)

என்ற அடிகளால் அறியலாம். மேலும் உழவர் மகளிர் வாளை மீன்களுடன் அரிசிச்சோறு தருவர் என்பதை மலைபடுகடாமும் கூறுவதில் இவர்களின் விருந்தோம்பல் நன்கு புலப்படுகிறது.

**நெய்தல் நில மக்கள்**

கடல் சார்ந்த பகுதி நெய்தல் நிலமாகும். மீன் பிடிப்பதும், உப்பு விளைவித்தலும் இங்குள்ள மக்களின் தொழில் ஆகும். இவர்களை பரதவர்கள் என்று அழைப்பர். இவர்கள் தங்கள் பகுதிக்கு வருபவர்களுக்கு கள்ளும் சுட்டக் கருவாடும், பன்றியின் இறைச்சியும் கள்ளும் வழங்கி உபசரிப்பர். இதனை,

"ஈர்நீசேறு ஆடிய இரும்பல் குட்டிப்

பல் மயிர்ப் பிணவொடு பாயம் போகாது

நெல்மா வல்சி தீற்றிப் பல்நாள்

குழிநிறுத்து ஒம்பிய குறுந்தாள் ஏற்றைக்

பொழுநிணத் தடியொடு துர்நறாப் பெருகுவீர்!"

பெரும்பாணாற்றுப்படை (341-45)

என்று பெரும்பாணாற்றுப்படை அடிகளால் அறியலாம்.

### 3. முடிவுரை

சங்க கால மக்கள் தங்கள் நிலத்தில் கிடைக்கும் பொருட்களை மற்றவர்களுக்கு மனமகிழ்வோடு விரும்பி வழங்கினர். கூத்தர், பாணர் முதலியவர்களுக்கு உணவு, உடை, உறையுள் தந்து மனித நேயத்துடன் வாழ்ந்தனர். ஆகவே சங்ககால மக்களின் மனிதநேயப் பண்புகள் தமிழர் பண்பாட்டிலிருந்து பிரிக்க இயலாத ஒன்றாக அமைந்து காணப்பட்டது. சங்க கால மக்களின் மனிதநேயம் இன்றளவும் நினைவு கூறத்தக்க வகையில் அமைந்துள்ளது என்றால் மிகையாகாது.

### துணைநூற்பட்டியல்

1. சங்கரலிங்கம்., **இலக்கிய வரலாறு,** மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1998.
2. சுவாமிநாதன்.அ, **தமிழக வரலாறு (2000 வரை)**. தீபா பதிப்பகம், பெருங்குடி, சென்னை – 600096, 2006.
3. சுவாமிநாதன்.அ, **தமிழக வரலாறும் பண்பாடும்,** தீபா பதிப்பகம், சென்னை, 1999.